| 2513) | பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமாக சமத்தூர் இராம அய்யங்கார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியின் மைதானத்தில் ஒருபுறத்தில் "ஸ்கேட்டிங்" மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. அமைக்கப்பட்ட "ஸ்கேட்டிங்" மைதானத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக, மைதானத்தில் பயிற்சி மேற்கொள்ளும் நபர்களை கண்காணிக்க, அலுவலக அறை மற்றும் பயிற்சி மேற்கொள்ளுபவர்களுக்கு உடை மாற்றும் அறையும் அமைக்க வேண்டியுள்ளது. மேலும், இரவு நேரங்களில் அமைக்கப்பட்ட மைதானத்திற்குள் உள்ளே புகுந்து, தீண்டதகாத செயல்களில் ஈடுபடாமல் இருக்க, அருகிலுள்ள பள்ளிக்கும், மைதானத்திற்கும் இடையில் கம்பிவேலியுடன் கூடிய தடுப்பு வேலியும், மற்றும் பழைய சுற்றுச்சுவற்றை இடித்து, மைதானத்தை தனிமைப்படுத்தும் விதமாகவும், பயிற்சி மேற்கொள்ளுபவர்களுக்கு ஏதுவாகவும், முகப்பில் தனி வழி ஏற்படுத்த இரும்பு கிரில் அமைக்கவேண்டியுள்ளது. மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.11.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2514) | நகராட்சிக்கு சொந்தமான பாலக்காடு சாலையில் நகராட்சி ஆண்கள் மேல் |

| | |
|---|---|
| | **நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பணி வளாகத்தின் பின்புறம் ஸ்கேட்டிங் பயிற்சி மேற்கொள்ளுபவர்களுக்காக "ஸ்கேட்டிங்" மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்கேட்டிங் மைதானம் அடுத்து கால் பந்து மைதானமும், இதன் அருகில் கூடைப்பந்து மைதானமும் உள்ளது. இந்த ஸ்கேட்டிங் மைதானத்தை தனிமைப்படுத்தும் விதமாக, பாதுகாப்பு கருதியும் தனியாக சுற்றுச்சுவர் மற்றும் கம்பிவேலியுடன் கூடிய தடுப்பு வேலி அமைத்து, இரும்பு கிரில் கேட் அமைக்கலாம்.**<br>**மேலும், பள்ளியின் மேல்தளத்தில் Weathering Course க்கு மேல் Pressed Tiles அமைக்கப்பட்டுள்ளது. இது அமைக்கப்பட்டு சுமார் 50 வருடங்களுக்கு மேல் ஆவதாலும், அதிகப்படியான மழை மற்றும் வெப்பத்தாலும், பெயர்ந்தும் உடைந்த நிலையிலுள்ளது. இதனால் மேற்பரப்பில் பெய்யும் மழை நீர் வகுப்பறைகளுக்குள் விழுகிறது. இதனால் பயிலும் மாணவர்கள் பெரிதும் சிரமப்பப்படுவதோடு, பக்கச்சுவர்களில் பலம் வழுவிலுக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைத் தடுக்கும் பொருட்டு, மேற்பரப்பில் பழுதடைந்த Pressed Tiles உடன் Weathering Course-யை அகற்றிவிட்டு புதியதாக அமைக்க வேண்டியுள்ளது. மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.11.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.** |
| **2515)** | **பொள்ளாச்சி நகராட்சியின் வார்டு எண்:23-ல் அமைந்துள்ள விப்ஜியார் வேலி மற்றும் குமரன் நகர் முக்கிய சாலை இணையும் பகுதியில், அமைந்துள்ள சிறுபாலம் கட்டப்பட்டு பல ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளது. மேலும், பாதாள சாக்கடைப் பணிக்காக குழாய் பதித்து சிறுபாலத்தின் குறுக்கே எடுத்துச் செல்லும் போது சேதமடைந்துவிட்டது. இதனால் தற்போது மிகவும் சேதமடைந்து கனரக வாகனங்கள் செல்ல இயலாத சூழ்நிலையும் மேலும், பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையிலும் உள்ளது. எனவே, பழைய சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**<br>**2. மேற்காண் செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.** |
| **2516)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமாக மீன்கரை ரோடு, அண்ணா காலணியில் பொதுக்கழிப்பிடம் உள்ளது. இக்கழிப்பிடம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதாலும், மழைக்காலங்களில் பெய்த மழை நீரினால், மேற்பரப்பு பழுதடைந்து உள்ளது. மேற்பரப்பு பழுதானதால், மழைநீர் பக்கச்சுவர்களின் வழியே உள்ளே விழுவதால், பக்கச்சுவர்கள் பழுதடைந்து பெயர்ந்த நிலையிலுள்ளது.<br>பக்கச்சுவர்கள் பெயர்ந்ததால், பக்கச்சுவர்களில் ஒட்டப்பட்ட டைல்ஸ்கள் மற்றும் தரைத்தள டைல்ஸ்கள் உடைந்த நிலையில் உள்ளது. இதனால் கழிப்பிடத்தை பயன்படுத்தும் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். **எனவே,** பொதுமக்கள் நலன் கருதி, கழிப்பிடத்தை பயன்படுத்தும் விதமாக கழிப்பிடத்தில் மராமத்துப்பணி மேற்கொண்டு, புதுப்பிக்க வேண்டியுள்ளது. கழிப்பிடத்தில் மராமத்துப் பணி மேற்கொண்டு புதுப்பிக்க ரூ.**3.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| | தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொதுநிதியில் மேற்கொள்ள, மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2517)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான பொதுக்கிணறு குமரன் நகர் ரங்கசாமி லே அவுட்டில் அமைந்துள்ளது. இக்கிணற்றின் பக்கச்சுவற்றின் உயரம் குறைவின் காரணமாகவும், உள்பகுதியில் மரம் செடி கொடிகள் வளர்ந்ததாலும், அடர்ந்த மரத்தின் கிளையிலிருந்து விழும் இலை, தழைகள் விழுந்ததின் காரணமாகவும், தண்ணீர் மாசு அடைந்து காணப்படுகிறது. பக்கவாட்டு சுவற்றின் உயரம் குறைவின் காரணமாக, அருகில் வசிக்கும் பொதுமக்கள் குப்பைகளை கிணற்றில் வீசுவதாலும், கிணற்றுநீர் மாசுபட்டு கொண்டுள்ளது.<br>மேலும், இலை தழைகள் தண்ணீர் இழுக்கும் மோட்டாரின் உள் பகுதிகளுக்குள் சென்று விடுவதால், மோட்டாரின் இயக்கம் தடைபடுவதோடு, குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. இதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, மேற்காணும் பிரச்சனைகளை தவிர்க்கும் பொருட்டும், பொதுமக்கள் நலன் கருதியும், கிணற்றிலுள்ள இலை, தழைகளை அகற்றி எடுத்து, மாசு படர்ந்த பழைய தண்ணீரை தூர்வாரி, கிணற்றைச்சுற்றிலும் மறைப்பு ஏற்படுத்த வேண்டியுள்ளது. மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.9.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் மதிப்பீட்டினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2518)** | பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமாக V.S.R.A பள்ளி செயல்பட்டு வருகிறது.<br>இக்கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 40 வருடங்களுக்கு மேல் ஆகிறது, மழைக்காலங்களில் பெய்யும், மழைநீர் காரணமாக, பக்கச்சுவர்கள் மற்றும் மேற்பரப்பு பெயர்ந்தும், உடைந்த நிலையில் உள்ளதை மராமத்துப்பணி மேற்கொண்டு புதுப்பிக்கவும், மேலும் பள்ளியின் பின்புறம் நடைபாதை வசதிக்காக பேவர் பிளாக் அமைக்கவும், மாணவ மாணவியர்கள் பயன்படுத்தும் கழிப்பிடங்களில் மராமத்துப்பணி செய்தும் மற்றும் மதிய உணவுக்கூடத்திற்கு அருகில் உள்ள, பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி விட்டு மாணவ, மாணவியர்கள் பயன்படுத்தும் சைக்கிள்களை நிறுத்த சைக்கிள் ஸ்டேன்டு அமைத்து மற்றும் வளாகத்திலுள்ள கட்டிடங்களில் வர்ணம் பூசி பொலிவு ஏற்படுத்த வேண்டியுள்ளது. பயிலும் மாணவ மாணவியர்கள் நலன் கருதி, மேற்காணும் பள்ளிக்கூடத்தில் மராமத்துப்பணி மேற்கொண்டு புதுப்பிக்க வேண்டியுள்ளது. எனவே, மராமத்துப்பணி மேற்கொண்டு புதுப்பிக்க ரூ.9.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையினை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **2519)** | பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்தில் கீழ்க்கண்ட உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து, விநியோக பகிர்மான குழாய்களுக்கு, குடிநீர் விநியோகிக்க ஏதுவாக நீர்த்தேக்க தொட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள Delivery Valve களின் உட்பகுதியில் தேய்மானம் அடைந்து, பழுது ஏற்பட்டுள்ளது. இதனை சரிசெய்ய இயலாத நிலையில் உள்ளது. இதனால் அதிகப்படியான நீர்க்கசிவு ஏற்பட்டு வருவதால், சீரான விநியோகம் செய்வதில் தடை ஏற்படுகிறது.<br>1. கே.ஆர்.பி.ஜி நகர் OHT – 300mm – 1 No<br>2. சுதர்சன் நகர் OHT – 300mm – 1 No<br>3. மகாலிங்கபுரம் OHT – 300mm – 1 No<br>எனவே பழுதடைந்த வால்வுகளுக்கு பதில் புதிய 300mm DI வால்வுகள் அமைக்கலாம். இப்பணியினை மேற்கொள்வதற்கும், இதற்கான மதிப்பீடு ரூ.2.80 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| **2520)** | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம் சந்திப்பு, திருவள்ளுவர் திடல் சந்திப்பு ஆகிய இடங்களிலுள்ள பழைய 400W MH பொருத்திகளை அகற்றி புதிதாக150W Flood Light LED பொருத்திகளை அமைத்தல் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br><br>1. M/S.Schnell Energy Equipments, Coimbatore. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு.<br>2. M/S.Micro Instruments Ltd. Coimbatore. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Schnell Energy Equipments, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.08% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Schnell Energy Equipments, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:3518/2020/இ1** |
| **2521)** | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான காந்தி சிலை சந்திப்பு மற்றும் பல்லடம் ரோடு மற்றும் புதிய திட்டசாலை சந்திப்புகளில் உள்ள பழைய 400W MH விளக்கு பொருத்திகளை அகற்றி புதிதாக 150W Flood Light LED பொருத்திகளை அமைத்தல் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br><br>1. M/S.Schnell Energy Equipments, Coimbatore. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு.<br>2. M/S.Micro Instruments Ltd, Coimbatore. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Schnell Energy Equipments, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u> |

<table>
<tr><td></td><td>
1. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.08% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Schnell Energy Equipments, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்:3518/2020/இ1
</td></tr>
<tr><td>2522)</td><td>
பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலை சந்திப்பு பல்லடம் ரோடு மற்றும் உடுமலை தேர்நிலை சந்திப்புகளில் உள்ள பழைய 400W MH விளக்கு பொருத்திகளை அகற்றி புதிதாக150W LED பொருத்திகளை அமைத்தல் பணிக்கு ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>M/S.Schnell Energy Equipments, Coimbatore.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.06% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/S.Micro Instruments Ltd, Coimbatore.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.91% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.06% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Schnell Energy Equipments, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.06% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Schnell Energy Equipments, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்:3518/2020/இ1
</td></tr>
<tr><td>2523)</td><td>
பொள்ளாச்சி நகராட்சி 5-வது வார்டு LIG காலனி சிந்தியா கிளினிக் முன்புறம் உள்ள கழிவுநீர், சாலையின் குறுக்கே உள்ள சிறுபாலம் வழியாக சென்று மறுபுறம் உள்ள கழிவுநீர் கால்வாயில் இணைகிறது. பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ளும்போது சிறுபாலமானது சேதமடைந்ததால் கழிவுநீர் மற்றும் மழை நீரானது வடிந்து செல்வதற்கு வழியில்லாமல் தேங்கி நிற்கிறது. எனவே, மேற்காணும் இடத்தில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதிதாக சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.1.40 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மதிப்பீட்டு தொகையினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள
</td></tr>
</table>

| | |
|---|---|
| | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 3966/2020/H2 |
| 2524) | பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான வெங்கட்ரமணன் தெரு சந்திப்பு முதல் மார்கெட் சாலையில் ரயில்வே ஸ்டேசன் சாலை வரையில் உள்ள குடிநீர் விநியோகக்குழாய் மற்றும் பகிர்மான குழாய்கள் புதிதாக அமைக்கும் பணிக்கு ரூ.24.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு. |

| | | |
|---|---|---|
| 1. | M/S. Classic Enginering Enterprises, Coimbatore. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவு. |
| 2. | M/S.KPS Engineering Constructions, Metturdam. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.50% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.07% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S. Classic Enginering Enterprises,Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.07% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.Classic Enginering Enterprises, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:4067/2020/இ1

2525) பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட சோமசுந்தராபுரத்தில் ஒரு வேப்ப மரம், உழவர் சந்தை முன்புறம் ஒரு வேப்ப மரம், ஷெரிப் காலனி முன்புறம் மற்றும் பின்புறம் இரண்டு அரச மரம், தாயுமானவர் வீதியில் ஒரு வேப்பமரம், சி.டி.சி டிப்போ கோவை சாலையில் இரண்டு தூங்குவாகை மரம், நேதாஜி ரோட்டில் ஒரு தூங்குவாகை மரம் (கிளைகள் மட்டும்), ஏ.பி.டி ரோட்டில் ஒரு வேப்பமரம் (கிளைகள் மட்டும்), கீழே விழும் தருவாயில் உள்ளதால், அம்மரத்தினை வெட்டி எடுத்து கொள்ளும் பணிக்கு 21.10.2020 அன்று பொது ஏலம் நடைபெற்றதில் கலந்து கொண்ட மூன்று ஏலதாரர்களின் உயர்ந்த பட்ச ஏல கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கலாம்.

| வ.எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச ஏல கேள்வி |
|---|---|---|
| 1 | P.R.S.சண்முகசுந்தரம்,<br>த/பெ.சுப்ரமணியம்,<br>89/35,மரப்பேட்டை வீதி<br>பொள்ளாச்சி. | ரூ.31600/- |
| 2 | எஸ்.விவேக். | ரூ.31300/- |

| | | |
|---|---|---|
| | த/பெ.சண்முக சுந்தரம்.<br>**108/19,** கரிகாளியம்மன் கோவில் வீதி.<br>பொள்ளாச்சி | |
| **3** | ஆர்.**சிவராஜ்**<br>**த/பெ.ராமசாமி,**<br>68,**பொட்டுமேடு,**<br>**உடுமலை ரோடு,**<br>**பொள்ளாச்சி.** | **ரூ.31500/-** |

<u>அலுவலகக் குறிப்பு</u> :

1. மேற்காணும் மூன்று ஏலக்கேள்விகளில் அதிகபட்ச ஏலக்கேள்வி கேட்கப்பட்டுள்ள P.R.S.சண்முகசுந்தரம் , பொள்ளாச்சி அவர்களின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
2. உயர்ந்தபட்ச ஏலதாரர் P.R.S.சண்முகசுந்தரம், பொள்ளாச்சி அவர்களின் ஏலத்தொகை ரூ.31600/- **மற்றும்** GST **வரித்தொகை** □□.3792 நகராட்சி கருவூலகத்தில் செலுத்தி உள்ளார். (செ.சீ.எண்.076 / PMC/11 /20-21 /0002586, நாள்- 21.10.2020)
3. போக்குவரத்து மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு நலன் கருதி ஏலம் விடப்பட்டுள்ள மரங்களை உடனடியாக வெட்டி எடுத்துக் கொள்ள ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.6687/2019/இ2**

**2526)** **பொள்ளாச்சி நகராட்சியின் எல்லைக்குள் பாலக்காடு செல்லும் மாநில நெடுஞ்சாலையில் வடுகபாளையம் பிரிவு அருகே உள்ள இரயில்வே கடவில் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் பாலக்காடு செல்லும் போக்குவரத்து CTC மேட்டுச்சாலை மற்றும் வடுகபாளையம் வழியாக இயங்கி வருகிறது. இதனால் இலகு, கனரக மற்றும் அனைத்து வாகன போக்குவரத்தும், CTC மேட்டுச்சாலை மற்றும் வடுகபாளையம் வழியாக, இரவு பகல் தொடர்ந்து போக்குவரத்து செயல்பட்டு வருவதால், மேற்காண் சாலை இரவுநேரத்தில் போதிய வெளிச்சம் இன்றி போக்குவரத்திற்கு இடையூராகவும், விபத்துகள் ஏற்படும் வகையில் உள்ளது.**

**எனவே, கோவை சாலை இணைப்பிலிருந்து, CTC மேட்டுச்சாலை மற்றும் வடுகபாளையம் அம்பேத்கர் வீதி வரை ஏற்கனவே உள்ள 28 எண்ணம் தெருவிளக்கு மின் கம்பங்களில் 20W LED விளக்குகளுக்கு பதிலாக, அதிக ஒளி உமிழ் 90W LED விளக்குகள் அமைத்திடவும், இதற்கான மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு:**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்:4451/2020/இ2**

**2527)** **பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான கிழக்குப்பகுதியிலுள்ள 18 வார்டுகளில் ஏற்படும் குடிநீர் கசிவு உடைப்புகள் கிணற்று நீர் குழாய் கசிவு மற்றும் குடிநீர் விநியோக வால்வு கசிவுகள் ஆகிய பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.**

| | |
|---|---|
| | |

| | | |
|---|---|---|
| 1. | M/S.SK Constructions,Madurai. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு. |
| 2. | Thiru.R.Subramaniam, Pollachi. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.42% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.SK Constructions, Madurai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S.SK Construction, Madurai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:4336/2020/இ1

**2528)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்:17, மாரியப்பன் வீதியில் 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் தொட்டி பழுதடைந்துள்ளதனை புதிதாக மாற்றி அமைத்தல் பணிக்கு ரூ.0.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு 01.10.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவு. |
| 2. | திரு.G.விக்னேஷ், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.57% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.13% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி

பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:2084/2020/இ1

2529) பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான மேற்குப்பகுதியிலுள்ள 18 வார்டுகளில் ஏற்படும் குடிநீர் கசிவு உடைப்புகள் கிணற்று நீர் குழாய் கசிவு மற்றும் குடிநீர் விநியோக வால்வு கசிவுகள் ஆகிய பராமரிப்பு செய்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு. |
| 2. | திரு.G.விக்னேஷ், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.11% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.12% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.சதீஸ்குமார், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:4336/2020/இ1

2530) பொள்ளாச்சி நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு 14-வது சேமிப்பு நிதி 2019-20-ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்:18 ஜீப்ளி கிணறு வீதியில் பல்நோக்கு மையம் கட்டுதல் பணிக்கு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு 20.10.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவு. |
| 2. | திரு:ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.69% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு:<br>1. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.16% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S:தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:3252/2020/இ1 |
| 2531) | பொள்ளாச்சி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 14வது சட்டப்பேரவை சேமிப்பு நிதியின் கீழ் வார்டு 18 ஜூப்ளி கிணறு வீதியில் பல்நோக்கு மையம் கட்டுதல் பணிக்கு, மேற்காணும் பார்வையில் உள்ளவாறு ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற கடித நகல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்க, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.3252/2020/இ1 |
| 2532) | பொள்ளாச்சி நகராட்சியில் பணி ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.A.சக்திவேல், என்பவர் W.P.NO.13256/2020, நாள்:17.09.2020-ல் நகராட்சிக்கு எதிரான வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் 3-வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்திட, திரு.பி.ஆனந்த், சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களை நியமிக்கவும், வாழ்க்கினத்திற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: 4274/2020/இ1 |
| 2533) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்துவதற்கு உரிய படிவங்களில் விபரங்களை சேகரம் செய்யுமாறு இந்நகராட்சிப்பகுதியில் உள்ள 36 வார்டுகளில் 10105 குடும்பங்களின் விபரங்களுடன் அடங்கிய படிவங்கள் இணையதளம் வழியாக அரசு ஆணை (நிலை) எண்.170, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (ம.அதி.3)துறை, நாள்.27.10.2020-ல் தெரிவிக்கப்பட்டு விபரங்களுடன் படிவங்கள் வரப்பெற்றுள்ளது. அதன்பேரில், படிவங்கள் அச்சிட்டு பிரதிகளாக எடுக்கவும், அதில் கோரியுள்ள கூடுதல் விபரங்கள் கள ஆய்வு செய்து அவைகளின் விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-க்கு (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4905/2020/ஜி1 |

2534) பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுழற்சி முறையில் 86 நபர்களைக் கொண்டு கொசு, கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியாளர்களுக்கு நாள் கூலி 2019-2020ம் ஆண்டுக்கான மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த நாள் கூலி அடிப்படையில் கூலி வழங்கப்பட்டது.

தற்போது 2020-21ம் ஆண்டுக்கான மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்: 7457/2020/இ3 நாள்:25.09.2020-ல் கூலி உயர்வு செய்து கடிதம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த கூலியை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளதின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கூலி மாற்றம் செய்ய மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | 2019-20ம் ஆண்டு கூலி | | 2020-2021ம் ஆண்டு கூலி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | ரூ.350/- | ரூ.400/- | ரூ.50/- |

எனவே பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதியும், துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், கூலியினை நவம்பர் மாதம் முதல் உயர்வு செய்து வழங்கவும் அதற்கான செலவினம் ரூ.8,00,000/-க்கும் (01.10.2020 - 28.02.2021) மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்: 7457/2020/இ3 நாள்:25.09.2020-ன் படி துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.350/-ல் இருந்து ரூ.400/- ஆக உயர்வு செய்து வழங்கவும், அதற்கான கூடுதல் செலவினத்திற்கும் மன்றம் முன் அனுமதிக்கலாம்.

ந.க.எண்- 2476/2020/ எச்3

2535) பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுழற்சி முறையில் 76 நபர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணியாளர்களுக்கு நாள் கூலி 2019-20ம் ஆண்டுக்கான மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த நாள் கூலி அடிப்படையில் கூலி வழங்கப்பட்டது.

தற்போது 2020-2021 ம் ஆண்டுக்கான மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்:7457/2020/இ3 நாள்:25.09.2020-ல் கூலி உயர்வு செய்து கடிதம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த கூலியை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளதின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கூலி மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | 2019-20ம் ஆண்டு கூலி | | 2020-21ம் ஆண்டு கூலி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | ரூ.400/- | ரூ.450/- | ரூ.50/- |

எனவே பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதியும், துப்புரவுப்

**பணியாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், கூலியினை நவம்பர் மாதம் முதல் உயர்வு செய்து வழங்கவும் அதற்கான த செலவினம் ரூ.14,00,000/-க்கும் (01.10.2020 - 31.08.2021) மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.**

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்: 7457/2020/இ3 நாள் :25.09.2020-ன் படி துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.400/-ல் இருந்து ரூ.450/- ஆக உயர்வு செய்து வழங்கவும், அதற்கான கூடுதல் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்- எச்3/2477/2020**

**2536)** பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட 17 அரசு மற்றும் நகராட்சி பள்ளிக்கூடங்களில் 32 பணியாளர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணியாளர்களுக்கான நாள் கூலி 2019–20ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த நாள் கூலி அடிப்படையில் கூலி வழங்கப்பட்டு வருகிறது.

**தற்போது 2020-2021 ம் ஆண்டுக்கான மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்:7457/2020/இ3 நாள்:25.09.2020-ல் கூலி உயர்வு செய்து கடிதம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த கூலியை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளதின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கூலி மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

| வ.எண் | 2019-2020ம் ஆண்டு கூலி | | 2020-2021ம் ஆண்டு கூலி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1 | **துப்புரவு பணியாளர்** | **ரூ.400/-** | **ரூ.450/-** | **ரூ.50/-** |
| 2 | பெருக்குனர் | **ரூ.350/-** | **ரூ.400/-** | **ரூ.30/-** |

எனவே பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதியும், துப்புரவு பணியாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், கூலியினை நவம்பர் 2020 முதல் உயர்வு செய்து வழங்கவும் அதற்கான செலவினம் ரூ.7,00,000/–க்கும் மன்றத்தின் முன் அனுமுதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.7457/2020/இ3, நாள்–25.09.2020ன்படி துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.400/–ல இருந்து ரூ.450/– ஆகவும், ரூ.350லிருந்து ரூ.400/– ஆகவும் உயர்வு செய்து வழங்கவும், அதற்கான கூடுதல் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4627/2019/எச்3**

**2537)** பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளில் மற்றும் புதிய, பழைய பேருந்து நிலையங்களில் ஒப்பந்த அடிப்படையில் 191 நபர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணியாளர்களுக்கான நாள் கூலி 2019–20ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த நாள் கூலி அடிப்படையில் கூலி வழங்கப்பட்டு வருகிறது.

**தற்போது 2020-2021 ம் ஆண்டுக்கான மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்:7457/2020/இ3 நாள்:25.09.2020-ல் கூலி உயர்வு செய்து கடிதம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த கூலியை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளதின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கூலி மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

| வ.எண் | 2019-20ம் ஆண்டு கூலி | | 2020-21ம் ஆண்டு கூலி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | ரூ.400/- | ரூ.450/- | ரூ.50/- |

எனவே பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதியும், துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், கூலியினை நவம்பர் மாதம் முதல் உயர்வு செய்து வழங்கவும் அதற்கான செலவினம் ரூ.50,00,000/-க்கும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்:7457/2020/இ3 நாள் :25.09.2020-ன் படி துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.400/-ல் இருந்து ரூ.450/- ஆக உயர்வு செய்து வழங்கவும், அதற்கான கூடுதல் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்- 4627/2020/ எச்3

2538) சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு wp எண்.16287/2020-ல் திரு.ஜெயபிரகாஷ் மற்றும் 14 நபர்கள் ஆணையர், பொள்ளாச்சி நகராட்சி அவர்களை 1-ம் பிரதிவாதியாகவும், அரசு முதன்மை செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களை 2-ம் பிரிதிவாதியாக சேர்த்து பேருந்து நிலையத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள கடைகளுக்கு 01.06.2020 முதல் 30.09.2020 வரையிலான கொரோனா நோய் தொற்று ஊரடங்கு காலத்தில் வாடகை தொகையினை தள்ளுபடி செய்திடவும், அக்காலத்திற்கான வாடகை தொகையினை வசூலிப்பதற்கு தடை விதிக்க கோரியும் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை திரு.இ.பாலமுருகன், சிறப்பு அரசு வழக்கறிஞர், மூலம் 1 மற்றும் 2-ம் பிரதிவாதிகள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும் அதற்கான அனைத்து செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.5127/2020/அ6

2539) சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு WP எண்.15466/2020-ல் திரு.என்.பரமேஸ்வரன், த/பெ நஞ்சப்பன் என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்காண் வழக்கினை அரசு வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்கள் மூலம் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் அனைத்து செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

| | |
|---|---|
| | **மன்றம் அனுமதிக்கலாம்**<br>**ந.க.எண்.5037/2020/அ1** |
| **2540)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்படும் 8 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்களுக்கு (TATA ACE) டயர் புதிதாக மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–த்திற்கும் மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.4131/2020/எச்2** |
| **2541)** | **நகராட்சி வரியில்லா இனங்களில் உள்ள குத்தகை இனங்களுக்கு சேவைவரி 01.04.2015 முதல் 30.06.2017 வரையிலான காலத்திற்கு சேவைவரி குறைவாக செலுத்தப்பட்டதாக தெரிவித்து சரக்கு மற்றும் சேவைவரி துறை அலுவலகம் (தணிக்கை), கோவை அவர்களால் காரணம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. வசூல் செய்யப்பட்டுள்ள சேவைவரி தொகை சேவைவரி துறை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதால் இது குறித்து திரு.துரைராஜ், வழக்கறிஞர்(The Indian tax advisior) மூலம் சட்ட ரீதியான பதில் வரைவு தயார் செய்து வழங்கிடவும், நகராட்சியின் சார்பாக சேவைவரி துறை அலுவலகத்தின் ஆணையத்தில் ஆஜரகி விபரம் வழங்கிட தெரிவித்தும், மேலும் இதர சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.**<br>அலுவலக குறிப்பு:<br>**மன்றம் அனுமதிக்கலாம்**<br>**ந.க.எண்.672/2020/அ6** |

| | |
|---|---|
| 2542) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 17 அரசு மற்றும் நகராட்சி பள்ளிக்கூடங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள 01.12.2019 முதல் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு துப்புரவு பணிகள் வெளி ஆட்கொணர்வு மூலம் (out sourcing) 20 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 12 பெருக்குனர்களை கொண்டு நடைபெற்று வருகிறது. இவர்களின் ஒப்பந்த பணிகாலம் 30.11.2020 உடன் முடிவடைய உள்ளது. மேற்காண் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனமான சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் நிறுவனம் தங்களது ஒப்பந்த புள்ளியினை செயல்பாடுகளின்(Performance) அடிப்படையில் பணிநீட்டிப்பு செய்து தர விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளது. மேலும் பொள்ளாச்சி நகராட்சி ஒப்பந்த நிபந்தனைகள் வரிசை எண்.40-ன் படி ஒப்பந்ததாரரின் பணிகாலம் முடிவு பெற்ற பின் அவர் மேற்கொண்ட பணிகள் நகராட்சிக்கு திருப்தி ஏற்படும் பட்சத்தில் அப்பணி நீட்டிப்பு செய்யலாம் என்ற நிபந்தனையின் படி தற்போது நகர் பகுதியில் உள்ள 17 பள்ளிக்கூடங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் நிறுவனத்தின் பணிதிறன் மற்றும் செயல்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் உள்ளதாக துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் நகர் அலுவலர் சான்று வழங்கியுள்ளதன் பேரில் ஒப்பந்த காலத்தினை ஏற்கனவே விதிக்கப்பட்ட நகராட்சி ஒப்பந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒருவருட காலத்திற்கு (01.12.2020 முதல் 30.11.2021 வரை நீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவினத்திற்கும் பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வரும் திருவாளர்கள்.சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் நிறுவனத்திற்கு பணிக்கால நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்- 4627/2019/எச்3** |
| 2543) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் மற்றும் நகராட்சி பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள 01.12.2019 முதல் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு துப்புரவு பணிகள் வெளி ஆட்கொணர்வு மூலம் (out sourcing) 191 ஒப்பந்த தூய்மை பணியாளர்களை கொண்டு நடைபெற்று வருகிறது. இவர்களின் ஒப்பந்த பணிகாலம் 30.11.2020 உடன் முடிவடைய உள்ளது. மேற்காண் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனமான சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் நிறுவனம் தங்களது ஒப்பந்த புள்ளியினை செயல்பாடுகளின்(Performance) அடிப்படையில் பணிநீட்டிப்பு செய்து தர விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளது. மேலும் பொள்ளாச்சி நகராட்சி ஒப்பந்த நிபந்தனைகள் வரிசை எண்.46-ன் படி ஒப்பந்ததாரரின் பணிகாலம் முடிவு பெற்ற பின் அவர் மேற்கொண்ட பணிகள் நகராட்சி திருப்தி ஏற்படும் பட்சத்தில் அப்பணி நீட்டிப்பு செய்யலாம் என்ற நிபந்தனையின் படி தற்போது நகர் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் நிறுவனத்தின் பணிதிறன் மற்றும் செயல்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் உள்ளதாக துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் நகர் அலுவலர் சான்று வழங்கியுள்ளதன் பேரில் ஒப்பந்த |

காலத்தினை ஏற்கனவே விதிக்கப்பட்ட நகராட்சி ஒப்பந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒருவருட காலத்திற்கு (01.12.2020 முதல் 30.11.2021 வரை நீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவினத்திற்கும் பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வரும் திருவாளர்கள்.சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ் நிறுவனத்திற்கு பணிக்கால நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்- 4627/2019/எச்3

**2544)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இயக்கப்படும் எட்டு(8) எண்ணிக்கையிலான இலகுரக (LCV) வாகனங்களுக்கு டயர் மற்றும் டியூப் மாற்றம் செய்யும் பணிக்கு 11.11.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | M/s. ஜே.டி அன் கோ, 160, கோவை ரோடு, பொள்ளாச்சி. | ரூ. 1,98,000/- |
| 2 | எஸ் ஜே பி ஒர்க்ஸ்/ டிரேடர்ஸ், 128/1, சி.டி.சி காலனி, கோட்டூர் ரோடு, பொள்ளாச்சி | ரூ. 1,95,200/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள எஸ்ஜேபி ஒர்க்ஸ்/டிரேடர்ஸ், 128/1, சி.டி.சி காலனி, கோட்டூர் ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது மேலும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. .

அலுவலக குறிப்பு

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய எஸ் ஜே பி ஒர்க்ஸ்/ டிரேடர்ஸ், 128/1, சி.டி.சி காலனி, கோட்டூர் ரோடு, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்

**2545)** திருவாளர் சுரபி நர்சரி, ஈரோடு என்கின்ற ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 2012–2013 முதல் 2013–2014 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்ள முன்வைப்புத் தொகையினை செலுத்தி கீழ்க்கண்டவாறு பணி கிடைக்கப்பெற்று பணி முடிக்கப்பட்டுளளார். அன்னார் சம்மந்தப்பட்ட பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட முன்வைப்புத் தொகை மற்றும் பிணையத் தொகையினை திரும்ப வழங்க விண்ணபித்துள்ளார். அன்னாரின் தொகை ரூ.472780/—னை காலங்கடந்த வைப்புநிதி கணக்கில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு மேற்படி தொகை ரூ.472780/— திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**திரும்ப வழங்க வேண்டிய வைப்புத் தொகையின் விவரம்.**

| S.NO | Name Of Work | | Amount | Revenue Fund DP Reg P.G No |
|---|---|---|---|---|
| 1 | Providing park at Majalakshmi nager | EMD | 9000 | 33 |
| | | ASD | 9779 | 47 |
| | | WITH HELD | 46948 | 47 |
| 2 | Providing park at Rathinam nager | EMD | 9000 | 34 |
| | | WITH HELD | 46948 | 49 |
| 3 | Providing Lawn,plants and Extra Works Mahalakshmi nager and Rathinam nagar park | EMD | 9100 | 52 |
| | | ASD | 9100 | 58 |
| | | WITH HELD | 45500 | 58 |
| 4 | Providing Electrification arrangments and drilling of borewell Mahalakshni nagar and Rathinam nagar park | EMD | 6400 | 48 |
| | | ASD | 6400 | 58 |
| | | WITH HELD | 32000 | 58 |
| 5 | Providing park at Rathina Sabapathi nager park | ASD | 7500 | 92 |
| | | WITH HELD | 37500 | 92 |
| 6 | construction of SWD at ward no 10 from marriammal layout to krishnasamy layout | EMD | 8700 | 61 |
| | | ASD | 8700 | 57 |
| | | WITH HELD | 42805 | 57 |
| 7 | Renovation and improvement to the park at Sunnamal layout | ASD | 9300 | 25 |
| | | WITH HELD | 46500 | 25 |
| 8 | providing park at sbapathi nagar park additional work | ASD | 13600 | 24 |
| | | WITH HELD | 68000 | 25 |
| | | Total | 472780 | |

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3912/2020/பி4**

2546) திருவாளர் சுரபி நர்சரி, ஈரோடு என்கின்ற ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 2012–2013 முதல் 2013–2014 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்ள முன்வைப்புத் தொகையினை செலுத்தி கீழ்க்கண்டவாறு பணி கிடைக்கப்பெற்று பணி முடிக்கப்பட்டுளளார். அன்னார் சம்மந்தப்பட்ட பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட முன்வைப்புத் தொகை மற்றும் பிணையத் தொகையினை திரும்ப வழங்க விண்ணப்பித்துள்ளார். அன்னாரின் தொகை ரூ.117700/–னை காலங்கடந்த வைப்புநிதி கணக்கில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு மேற்படி தொகை ரூ.117700/– திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**திரும்ப வழங்க வேண்டிய வைப்புத் தொகையின் விவரம்.**

| S.NO | Name Of Work | | Amount | Revenue Fund DP Reg P.G No |
|---|---|---|---|---|
| 1 | Providing Park at Anbu Nagar | EMD | 9000 | 41 |
| | | ASD | 9000 | 83 |
| | | WITH HELD | 45000 | 83 |
| 2 | Providing park at sundaram Layout | EMD | 9000 | 41 |
| | | ASD | 6100 | 83 |
| | | WITH HELD | 30500 | 83 |
| 3 | Providing Electrification arrangments and Drilling of bore well Anbunagar and sundram layout | EMD | 6100 | 48 |
| | | ASD | 9500 | 57 |
| | | WITH HELD | 47500 | 57 |
| | | Total | 171700 | |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.பி4/3910/2020**

2547) பொள்ளாச்சி 123 சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் புதிய வாக்காளர்களை சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் தொகுதிக்குள் இடமாற்றம் சம்மந்தமாக சிறப்பு முகாம்களில் பெறப்படும் படிவங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட படிவங்களை தனியார் கணினி மையம் அல்லது தனியார் கணினி ஆப்ரேட்டர்கள் மூலமாக ஆன்லைனில் பதிவேற்றம் செய்யவும் அதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.5117/2020/சி3**

2548) **பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான சாலைகளின் ஓரத்தில் உயிருள்ள மரங்கள் அமைந்துள்ளன. சாலைகளின் ஓரங்களில் அமைந்துள்ள மரங்களின் எண்ணிக்கை அறியும் பொருட்டு எண்கள் எழுதவேண்டியுள்ளது.**

**மரங்களில் எண்கள் எழுதுவதற்கு ரூ.1.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.**

**தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2549) | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட கலைவாணர் வீதி உள்ளது. இவ்வீதியானது ஏழைமக்கள் வசிக்கும் குறுகிய சந்து பகுதி ஆகும். இவ்வீதியில் கான்கிரிட் தளம் அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆனதால், மக்கள் பயன்பாடு, குழாய் அடைப்புகள் ஏற்படும்போது, அடைப்புகளை சரி செய்ய குழி தோண்டப்பட்டதால், கான்கிரிட் சாலை பெயர்ந்தும் உடைந்த நிலையில் காணப்படுகிறது. மேலும். வடிகால்களின் பக்கச்சுவர்கள் உடைந்த நிலையில் இருப்பதால், வடிகாலில் செல்லும் கழிவு நீர் ஆங்காங்கே தேங்கிய நிலையில் காணப்படுகிறது. மேலும், இதனால் சாலையில் உள்ள பொதுமக்கள் மற்றும் முதியோர்கள் சாலையை கடக்க முடியாமல் திணறிவருகின்றனர். பொதுமக்கள் மற்றும் முதியோர் நலன்கருதி உடைந்து, பெயர்ந்த நிலையிலுள்ள கான்கிரிட்தளத்தினை அகற்றிவிட்டு வடிகாலின் பக்கச்சுவர் அமைத்து, புதியதாக கான்கிரிட் தளம் அமைக்க வேண்டியுள்ளது. மேற்காணும் பணியினை மேற்கொள்ள ரூ.21.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2550) | இந்நகராட்சியில் 2018-2019ம் ஆண்டிற்குரிய தணிக்கை முடிவுற்ற வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் உள்ளூர் திட்டக்குழுமம் நிதிகளுக்குரிய தணிக்கை அறிக்கை பாகம் 2 மற்றும் குறிப்பு நகல்கள் பைண்டிங் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4000/- ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2613/2020/பி4 |